DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: C.C. No. 62/2014 |
| Session | ... | |
| | | Prosecution / PW-9 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திரு. மருத்துவர் ரமேஷ் ராம்நாத் |
| Father's Name (or) | | |
| Husband Name | : | த/பெ.ராமநாதன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(Accused absent )
Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 22.09.2025

---

**<u>முதல் விசாரணை ( சாட்சி நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க மீண்டும் அழைக்கப்பட்டு ஆஜராகியுள்ளார்.)</u>**

1. நான் தற்போது ராமநாதபுரம் இணைஇயக்குநர் மருத்துவ நல பணி அலுவலகத்தில் NHM ஒருங்கிணைப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கு சம்பவ காவத்தில் இராமநாதபுரம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியாற்றி வந்தேன்.நான்கடந்த 24.11.2016 தேதி இந்நீதிமன்றத்தில் ஆஜராகி இவ்வழக்கு சம்மந்தமாக சாட்சியம்அளித்தேன். மேலும் எனது சாட்சியத்தின்

மேல் குறுக்கு விசாரணை முழுமையாக அன்றையதினமே மேற்கொள்ளப்பட்டது. தற்போது நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் மறுபடியும் இவ்வழக்கு தொடர்பாக சாட்சியம்அளிக்க இந்நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளேன்.

2. கடந்த 02.01.2013 தேதி நான் இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியில்இருந்தபோது திருவாடானை அரசு மருத்துவமனையிலிருந்து மேல்சிகிச்சைக்காக திருவாடானை தாலுகாவை சேர்ந்த கனகம்மாளின் கணவர் கதிரேசன் அழைத்து வரப்பெற்றார். அவரை 07.01.2013 தேதி அன்று நான் பரிசோதித்தபோது அவரால் வாய் திறக்கமுடியாத நிலையில் இருந்தது. மேலும் கீழ்தாடையில் இரண்டு பற்கள் இல்லாமலும் அந்த இடத்தில் குழியாகவும் இருந்தது. அடுத்து இருந்த வலது பக்க பல் ஒன்று ஆடி கொண்டு எடுக்க வேண்டிய நிலையில் இருந்தது. ஆகையால் அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று சான்று அளித்தேன். என்னிடம் காட்டப்படும் மருத்துவ அறிக்கை நான் வழங்கியதுதான். **( கடந்த 24.11.2016 தேதி இந்நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளித்தபோது மேற்படி ஆவணமானது மேற்படி சாட்சி மூலம் Ex.X.1[ எண்ணம் 4] ஆக குறியீடுசெய்யப்பட்டது. மேலும் ராமநாதபுரம் அரசு மருத்துவமனையிலிருந்து அ.சா.1 க்கு வழங்கப்பட்ட மருத்துவ அறிக்கை அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்டது** ).போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**</u>

**1.** இவ்வழக்கில் காயம்பட்ட நபர் 02.01.2013 தேதி திருவாடானை அரசு மருத்துமனையில் முதலுதுவி சிகிச்சை பெற்று விட்டு ராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக வந்தார் என்றால் 02.01.2013 தேதி ராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்கு வந்தார். ஆனால் திருவாடானை அரசுமருத்துவமனையில் எப்போது சிகிச்சைபெற்றார் என்றால் எனக்கு தெரியாது.

2. காயம்பட்டநபர் திருவாடானை அரசு மருத்துவமனையில்இருந்துமேல் சிகிச்சைக்காக ராமநாதபுரம்அரசு மருத்துவமனைக்கு அனுப்பபட்ட பரிந்துரை

சிலிப்பில் காயம்பட்ட நபர் திருவாடானை அரசு மருத்துவமனையில் என்று, எப்போது சிகிச்சைக்காக அனுமதிக்கபட்டார் என்ற விவரம் இடம்பெறவில்லை என்றால் சரிதான்.காயம்பட்ட நபருக்கு ஸ்கேன்,எக்ஸ்ரே எடுப்பதற்காக தான் மேல்சிகிச்சைக்காக ராமநாதபுரம்அரசு மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டார் என்றாலசரியல்ல. காயம்பட்ட நபருக்கு நெஞ்சுவலி மற்றும பற்கள் விழுந்து காயம் ஏற்பட்டுள்ளது. அதனால் குறிப்பிட்ட சிறப்பு துறையில்சிகிச்சை பெறுவதற்காக ராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டார்.

3. இவ்வழக்கில் காயம்பட்ட நபருக்கு நான் எப்போதுசிகிச்சை அளித்தேன் என்றால் 07.01.2013 தேதி என்னிடம் சிகிச்சைக்கு கொண்டுவரப்பட்டார். காயம்பட்ட நபர் ராமநாதபுரம்அரசு மருத்துவமனையில் 02.1.2013 தேதி மேல் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் 07.01.2013 தேதி வரை அவருக்கு என்ன சிகிச்சைகள் அளிக்கப்பட்டன என்றால் முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது மேலும் அறுவை சிகிச்சை நிபுணர் மற்றும் ENT நிபுணரிடமிருந்து Opinion பெறப்பட்டுள்ளது.

4.மேற்படி opinion அளித்த நிபுணர்களின் பெயர்என்னவென்றால் அந்த விவரம் குறிப்பிடவில்லை. பொதுவாக பற்கள்விழுந்திருந்தால் OBG மற்றும் எக்க்ஸரே எடுத்து பார்த்தால் தான்அதன்காயத்தன்மை குறித்து தெளிவாக தெரியும் என்றால் மருத்துவர் மேற்படி காயத்தை ஆராய்ந்து பார்த்தாலே அதன் தன்மை தெரிந்துவிடும்.மேற்படி தேவைப்பட்டால் எக்ஸ்ரே எடுக்க பரிந்துரைசெய்யப்படும்.

5. எக்ஸ்ரே எடுத்தால் தான் காயத்தின் தன்மையை துல்லியமாகசொல்லமுடியும் என்றால் சரியல்ல. தேவைப்பட்டால் எடுத்தால்போதும்.நான் காயம்பட்ட நபருக்கு என்ன சிகிச்சைகள் அளித்தேன் என்றால் மாத்திரைகள் கொடுத்தேன். மேலும் அவரது பல் ஒன்று ஆடி கொண்டு இருந்ததால் அதனை

எடுப்பதற்காக பரிந்துரை செய்தேன். நான் பரிந்துரைசெய்து காயம்பட்ட நபருக்கு எக்ஸ்ரே எதுவும் எடுக்கப்படவில்லை என்றால் சரிதான்.

6. இவ்வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் 12 ஆண்டுகள்ஆகிவிட்டதால் விசாரித்தார்களா இல்லையா என்று நினைவில் இல்லை. பொதுவாக யாராவது படிக்கட்டில் நடக்கும்போது தள்ளாடி கீழேவிழுந்தால் மேற்படி இவ்வழக்கில் காயம்பட்டவருக்கு ஆனது போல் பற்கள் விழுந்து காயம்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். பொதுவாக வயது முதிர்வின் காரணமாக பற்கள் விழுவதற்கு வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.காயம்பட்ட நபருக்கு ஏற்பட்டுள்ள காயங்கள்அனைத்தும் மருத்துவத்தால் குணப்படுத்தக்கூடிய காயங்கள்என்றால் சரிதான்.

**மறுவிசாரணை**

இல்லை

Taken down by me/before me in
open court,interpreted/read over
to the witness and admitted by the
deponent to be correct.

Sd.-/J.Antony Rishandev,
Judicial Magistrate,
Thiruvadanai.